# வட-கிழக்கு மனித உரிமை மீறல்களை கண்டறிய நோர்வேயைச் சேர்ந்த குழுவொன்று வரவுள்ளது

பக்கங்கள் நான்கு
விலை ரூபா: 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 49 பிரமோதூத தை 02 (15-01-1991) செவ்வாய்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் பற்றி நோர்வேயைச் சேர்ந்த குழுவினர் ஆராயவுள்ளனர். கொழும்பில் தற்போது தங்கியுள்ள இக்குழுவினர் இன்னும் சில நாட்களில் வடக்குக் கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்து அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக இடம் பெற்றுவரும் தாக்கங்கள் குறித்தும் மதிப்பீடு செய்ய வுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாகக் கடந்த வருடம் நோர்வேயில் வெளியிடப் பட்ட ''இலங்கையில் மனித உரிமைகள் மீறல்'' என்ற புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எவ்வள வுக்கு உண்மையானவை என்பது பற்றி அறிந்துகொள் வதுடன் மேலும் வெளிவராத இத்தகைய சம்பவங்கள் பற்றியும் அறிவதில் இவர்கள் கவனம் செலுத்தவுள் ளனர் எனத் தெரியவருகிறது. தற்போது நோர்வே யில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப் புலிகளால் சிறை வைக்கப்பட்டிருந்த

# சிங்களப் பொலிஸ்காரர் ஒருவர் நேற்று விடுதலை

## மற்றொருவர் மாரடைப்பால் மரணம் சடலம் செஞ்சிலுவை மூலம் கொழும்புக்கு

விடுதலைப்புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தசிங்களப் பொலிஸ் காரர்களில் ஒருவர் நேற்று நண்பகல் விடுவிக்கப்பட்டார். அத்துடன் தடுப்புக்காவலில் மாரடைப்பு நோய் ஏற்பட்டு இறந்த சிங்களப் பொலிஸ்காரர் ஒருவரின் சடலமும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் நேற்று ஒப் படைக்கப்பட்டது.

இந்த ஒப்படைப்பு நிகழ்ச்சி நேற்று நண்பகல் 12 15 மணியளவில் கோண்டாவில் செயலகத்தில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் சார் பில் விடுதலைப் புலிகள் மக் கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப் பாளர் இ இராஜனும், சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத் தின் சார்பில் அதன் யாழ் அலுவலக தலைவரான பிறட்றிமும் ஒப்படைப்பு பத்திரத்தில் ஒப்பமிட்டுள் ளார்.

கடந்த ஜூன் மாதம் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுத லைப் புலிகளுக்குமிடையே யுத்தம் மூண்டதை அடுத்து ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய முற்றுகையின்போது கைது செய்யப்பட்ட 54 வய துடைய பொலிஸ் கான்ஸ்

—04 ஆம் பக்கம் பார்க்க

### வேலூர் சிறையில் வன்முறை போராளி மரணம்; பொலிஸ் காயம்

வேலூரில் தடுத்துவைக்கப் பட்டிருந்த இலங்கை தமிழ் போராளிகள் நேற்றுமுன் தினம் வன்முறையில் ஈடுபட்ட போது பொலிஸார் சுட்டதில் ஒரு போராளி கொல்லப்பட் டார் மற்றும் பலர் காய மடைந்தனர்

ஒரு சப் இன்ஸ்பெக்டரும் மூன்று பெண்பொலிஸாரும் இச்சம்பவத்தின்போது தாக் கப்பட்டனர். தம்மைசுதந்திர மாக நடமாடவிடவேண்டும் என கடந்த பல நாட்களாகக் காவலில் உள்ள இப்போராளிக ள் கேட்டுவந்தனர்.

இவர்கள் வெளியேறுவதற்

—04 ஆம் பக்கம் பார்க்க

### கூட்டுறவு இயக்குனர் சபை மாவீரர் குடும்பத்துக்கு அன்பளிப்பு

சாவகச்சேரி பல நோ. கூ. சங்க இயக்குனர் சபை உறுப் பினர்கள் தமது மாதாந்த விசேட படியை (அலவுன்ஸ்) ஈழ விடுதலைப் போராட்டத் தில் களப்பலியான மாவீரர் குடும்பம் ஒன்றுக்கு அன்பளிப் பாக வழங்குவதெனத் தீர் மானித்துள்ளனர்.

தமது பதவிக் காலம் பூரா கவும் தமக்குக் கிடைக்கும் இந்த அலவுன்ஸ் பணத்தை இவ்வாறு இயக்குனர்சபை உறுப்பினர்கள் வழங்குவதை கூட்டுறவாளர்கள் பாராட்டி யுள்ளனர். (66)

### முன்னாள் அமைச்சர் பாஸ்வான்

### தமிழகம் மீது வீண் பழிசுமத்தி அதைக்கலைக்க முற்படுகின்றனர்

இந்திரா கொங்கிரஸ் கட்சி யினதும் அ. தி. மு. க. கட்சி யினதும் ஆலோசனையின் பின்னணியிலேயே தமிழக அரசுமீது பொய்குற்றச்சாட்டு கள் சுமத்தப்பட்டு அதைக் கலைக்க முயற்சிகள் எடுக்கப் படுகின்றன.

இவ்வாறு வி பி சிங்கின் அரசில் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தவரும் தற்போதைய ஜனதாதள பாராளுமன்ற கட்சியின் துணைத்தலைவருமான ராம் நிவாஸ்பாஸ்வான் தெரிவித்

—04 ஆம் பக்கம் பார்க்க

### விசேட அதிரடிப்படையினரால் 35 ஆண்கள் கைது

அம்பாறை மாவட்டத்தி லுள்ள முன்முனைப்பகுதியை நேற்று முன்தினம் முற்றுகை யிட்ட விசேட அதிரடிப்படை யினர் அங்கிருந்து 35 ஆண்க ளைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களை திருக்கோயில் விசேட அதிரடிப்படை முகா மிற்கு கொண்டு சென்றுள்ள னர். பின்னர் இவர்களுக்கு என்ன நடந்தது என்ற விப ரம் தெரியவில்லை, (71)

### எதற்கும் உதவாத சல்பீனியா பூண்டு இனி காகித உற்பத்திக்கு பயனபடும்

எதற்கும் உதவாதது என கழித்துவிடப்படும் சல்பீனி யாப் பூண்டிலிருந்தும் யாழ்ப் பாணத்தில் காகித உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான பரீட்சார்த்த முயற்சிகள் வெற்றி அளித் துள்ளன.

இப் பூண்டிலிருந்து காகி தத்தை உற்பத்தி செய்யும் முறைபற்றி நேற்று பிற்பகல் நல்லூரில் இடம்பெற்ற காகி தத் தொழிற்சாலை திறப்பு விழாவின் போது செய்முறை யுடன் விளக்கமளிக்கப்பட் டது.

—04 ஆம் பக்கம் பார்க்க

### கடற்றொழிலாளர் பிரச்சினை

### விடுதலைப் புலிகளால் சமாதானமாகத் தீர்வு

கடற் தொழிலாளர்களி டையே நீண்டகாலமாக இருந்து வந்த பாடுபிடித்தல் பிரச்சினை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கடற் தொழில் பிரிவினர் எடுத்த தீவிர நடவடிக்கையால்சமா தானமாகத் தீர்த்து வைக் கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசத்தி லுள்ள பூநகரி கல்முனை கடற்றொழிலாளர் சங்கத் திற்கும் யாழ்.பாஷையூரில் உள்ள சங்கத்திற்கும் இடையே பல வருடங்களாக இடம்பெற்று வந்த இந்தப் பிரச்சினையை ஒவ்வொரு பிரி

—04 ஆம் பக்கம் பார்க்க

### சின்னமுளாயில் கடும் மோதல் இராணுவம் முகாம்திரும்பியது

ஊாகாவற்றுறை இராணுவ முகாமில் இருந்து சின்ன மூளாய் பக்கமாக இருந்த விடுதலைப்புலிகளின் காவல் அரண்மீது துப்பாக்கிப் பிர யோகம் செய்தவாறு ஆர் பீ. ஜி. தாக்குதல் மேற் கொண்டவாறு இராணுவத் தின் வாகனங்கள் சகிதம் முன்னேறினர்.

2ட்ரக், 1கவசவாகனம் சகிதம் வந்த இராணுவத் தினர்மீது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற் கொண்டனர் இதனையடுத்து இழப்புகளுடன் இராணுவத் தினர் முகாம் திரும்பினர். சேதவிபரம் தெரியவில்லை மோதல்கள் இரண்டு மணி நேரம் நடைபெற்றதாக தெரி விக்கப்படுகிறது. (71)

### தைப்பொங்கல் தினம் கடையில் பட்டாசுகள் வெடித்தன!

பொங்கல் தினமான நேற்று மாலை 5. 30 மணியளவில் திருநெல்வேலிசந்தைப்பகுதி யில் உள்ள கடையொன்றில் விற்பனைக்கு இருந்தபட்டாசு களில் தவறுதலாக தீப்பொறி விழுந்தி, அவை வெடிக்கத் தொடங்கின.

சுமார் பத்து நிமிடங்கள் தொடர்ச்சியாக பட்டாசுகள் வெடித்ததால், ஏதோவெடிச் சத்தம்' என்று அவ்வழியால் வந்தவர்கள் நாலாபக்கமும் ஓடியதையும் காணமுடிந்தது.

### யாழ் பேராலயத்தில் பொங்கல் விழா

தமிழர் பெருநாளாம் தைப் பொங்கல் இம்முறை யாழ் பேராலயத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தை வணபிதா எஸ். எச். ஜெபநேசன் அடி களார் பொங்கல் பூசைப் பலி காணிக்கை ஒப்புக் கொடுக்கப்பட்டது

யாழ் பேராலய வழவில் கோலமிட்டு பொங்கல் செய் யப்பட்டு வந்திருந்த அடியார் களுக்கு வழங்கப்பட்டது ப-17

### அமைதியான பொங்கல்

நேற்று தமிழ்ப்பகுதிகளில் அமைதியான முறையில் உழ வர் திருநாளாம் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது பட்டாசுகளின் வெடிப்பொலி கள் இம்முறை குறைவாகவே காணப்பட்டது எனினும் ஆல யங்களில் பக்தர்கள் [illegible] அதிக[illegible]

### 4 பிள்ளைகளின் தந்தை சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள கல்செட்டை எனும் இடத்தில் 37-ம் கிராமத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கண்ணப்பர் சேதாராம் (32) என்பவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல லப்பட்டார். (71)

# தபால் திணைக்களத்தைப் புனரமைக்க அரசு திட்டம்

தபால் திணைக்களத்தை புனரமைக்க அரசு திட்டமிட்டு உலக வங்கியின் அரசு பணிகள் திட்டமிடுதல் நிறுவனத்திடம் ஆலோசனை கேட்டுள்ளது என தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி சாதாரண கடிதங்களை தபாலில் அனுப்புவதற்காக அரச பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள இலவச சலுகைகளை நீக்கினால் தபாற் பகுதிக்கு 300 லட்சம் ரூபா மேலதிக வருமானமாகக் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

இத்திணைக்களத்தின் ஏனைய பகுதிகளில் 4792 உத்தியோகத்தர்களை குறைக்கலாம் எனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது இவை கம்ப்யூட்டர்மயமாக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (33)

# மாவட்ட பொதுப்பரீட்சைக்குத்தடை!

## பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பணிப்பு

பாடசாலைகளில் தவணைப்பரீட்சைகளுக்கு மாவட்ட ரீதியில் பொது வினாத்தாள்கள் தயாரிப்பதை உடன் நிறுத்துமாறு உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் சகல மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் பணித்துள்ளார்.

மாவட்ட ரீதியில் பொதுவினாத்தாள்கள் இனிமேல் தயாரிக்கப்படக் கூடாதெனவும், தவணைப்பரீட்சைக்கான வினாத்தாள்களை முன்போலவே ஒவ்வொரு பாடசாலைகளிலும் தயாரித்துக் கொள்ளுமாறும் இந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-17)

## 'கடவுளுக்கே வெளிச்சம்'

வளைகுடாவில் போர் மூளுமா, மூளாதா என்று ஈராக் தலைநகர் பாக்தாத்தில் வைத்து ஐ.நா செயலாளர் நாயகம் பெரஸ்டி குவெல்லரிடம் நிருபர்கள் கேட்டபோது "இதற்குப் பதிலளிக்க இயலாது, கடவுளுக்கே வெளிச்சம்" என்று பதிலளித்தார்.

# மன்னார் ஊழியர் சம்பளம் பெற இராணுவம் நிபந்தனை விதிக்கிறது

மன்னாரில் கடமை புரியும் அரசாங்க ஊழியர்கள் 1991 ஜனவரி முதல் மாதம் ஒன்றிற்கு ஆகக் குறைந்தது 15 நாட்கள் கடமையாற்றாதுவிடின் அம் மாதச் சம்பளம் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது என மன்னார் மாவட்ட இராணுவத் தளபதி அறிவித்துள்ளதாக மன்னார் அரச ஊழியர்கள் தெரிவித்தனர்.

மன்னாரில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்கள் 50 ரூபா பணம் செலுத்தித் திருக்கேதீஸ்வரத்திலிருந்து கடல் மார்க்கமாகப் பள்ளிமுனைக்குச் சென்று, கடமைக்குச் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-35

# பலியான படையினருக்குப் பலகோடி ரூபா காப்புறுதி

கடமையில் ஈடுபட்டிருந்த வேளை உயிரிழந்த, வலது குறைந்த பாதுகாப்புப் படையினர், பொலிஸார் ஆகியோருக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மூன்றுகோடி ரூபாவை வழங்கவுள்ளது.

சட்டபூர்வமாக நெருங்கிய உறவினர்களுக்கும், காயமடைந்தோருக்கும் இப்பணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ரஷ்ய ராணுவ அடக்குமுறைக்கு நேட்டோ, பிரி-பிரதமர் கண்டனம்

சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றான லிதுவேனிய குடியரசைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தும் கோரிக்கையையடுத்து சோவியத்யூனியன் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட இராணுவ அடக்குமுறை நடவடிக்கையை 'நேட்டோ ஸ்தாபனம் கண்டித்துள்ளது.

இக்குடியரசைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தக் கோரும் சர்வேஷன் அமைப்பு என்ற குழு ஒன்று லிதுவேனியாவின் தொலைக்காட்சி வானொலி நிலையங்களை சில நாட்களுக்கு முன் கைப்பற்றிக் கொண்டதனையடுத்து இவற்றை விடுவிக்கும் நோக்கில் சோவியத் இராணுவத் துருப்புக்கள் கவச டாங்கிகள் சகிதம் நடவடிக்கைமேற்கொண்டன.

வட அத்திலாண்டிக்ஒப்பந்த ஸ்தாபனமான 'நேட்டோ' பிறசெல்ஸில் நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிலைபற்றி லிதுவேனிய அதிகாரிகள் கூடி மதிப்பீடு செய்து சோவியத் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இதனிடையே லிதுவேனியா மீது இராணுவப்படைப் பலம் பிரயோகிக்கப்படுவது குறித்து பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜோன் மேஜர் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளதுடன் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு சோவியத்யூனியனை வலியுறுத்தினார்.

லிதுவேனிய - சோவியத் செயற்பாடுகளைத் தான் ஆழ்ந்த வேதனையுடன் அவதானித்து வருவதாக ஜெர்மனி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் தன் கவலையை வெளியிட்டுள்ளது.

# அதிபரைக் கிணற்றில் போட்ட ஆசிரியர்கள் பொலிஸ் காவலில்

ஆசிரியருக்கும் அதிபருக்கும் இடையே வாராந்தம் நடைபெறும் கூட்டம் இறுதியில் கைகலப்பில் முடிவடைந்து அதிபரை ஆசிரியர்கள் கிணற்றில் தூக்கிப் போட்டனர் எனினும் அவரது உயிர் பிரியவில்லை.

இச்சம்பவத்தினைத் தொடர்ந்து சில ஆசிரியர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் இந்நிகழ்வு இரத்தினபுரி மலையகப் பாடசாலையில் இடம்பெற்றது இது சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ப- 11

# சிங்களத்தேர்ச்சிஇன்மையால்வேலையிழந்த 24 நெசவு ஆசிரியருக்கு மீண்டும் வேலை

சிங்கள மொழிச் சித்தி பெறாததால் 1970 ஆம் ஆண்டிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த 24 நெசவு ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்ட காலப் பகுதியில் இவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லையாயினும் இக்காலப் பகுதி இவர்களின் சேவைக்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. (ப-24)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### தம்பித்துரை மரியதுரை மகேந்திரன்
### (மேஜர் தும்பன்)

தாயின் மடியில் 06.10.1968    தாயக மண்ணில் 15.01.1989

அன்புக்கோர் மைந்தனென்று
அன்னை தந்தைபெற்றெடுத்த
விடுதலைத் தாகங்கொண்ட
வீரப் புதல்வனவன்
நாட்டிற்கு உழைக்கவென்று — தன்
நலமெல்லாம் துறந்துவிட்டு
நல்லதொரு மைந்தனாய்
நன்மை பல செய்துவந்தான்
'தும்பன்' எனும் பெயர் கொண்ட
துள்ளு மத யானையவன்
துன்பத்தில் ஆழ்த்திவிட்டுத்
தொலை தூரம் சென்றுவிட்டான்
என்ன கொடுமையிது
எவரிடத்தில் எடுத்துரைப்போம்

உம் பிரிவால் கண்ணீர் சிந்தும்
பெற்றோர், சகோதரர்,
மைத்துனர், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

தும்பன் வீதி,
பண்டத்தரிப்பு.

01112


## முத்திரைச்சந்தியில் 'சாளி' திருட்டு

முத்திரைச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு ஒருவரின் சாளி மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டது.

இவர் இதனை ஒரு மரத்துக்குக் கீழ் நிறுத்திவிட்டு கொழும்பிலிருந்து வரும் நண்பரைச் சந்திக்கச் சென்றபோதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதேபோல ஒருவரின் சைக்கிளும் பூட்டு உடைத்து திருடப்பட்டுள்ளது. (74)

## ஆஸ்பத்திரியில் சிரமதானம்

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தைச் சார்ந்த உயிரியற்றுறை மூன்றாம் வருட மாணவர்கள் நேற்று முன்தினம்யாழ் ஆஸ்பத்திரியில் சிரமதானம் மூலம் சுற்றாடலைத்துப்புரவு செய்தனர்.


## 1-வது பிறந்தநாள் வாழ்த்து



★ சோ. டிலக்ஷன் ★

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த சோதிலிங்கம் இந்துமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் டிலக்ஷன் தனது முதலாவது பிறந்த நாளை 15 — 1 — 91 இன்று கோப்பாய் வடக்கு காளிகோவிலடியில் இருக்கும் மதியகம் இல்லத்தில், வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா அப்பப்பாமார், அப்பம்மாமார், தாத்தாமார், அம்மம்மாமார், பெரிய மாமா, பேர்லின் சின்ன மாமா, ஜேர்மனியில் இருக்கும் ஆசை மாமா, சுவிஸ் குட்டி மாமா, சவுதியில் இருக்கும் அத்தை மாமா, சித்தப்பாமார், அத்தைமார், அன்ரிமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

மதியகம்
கோப்பாய்.

01109

# வடக்கில் இராணுவம் கைதுசெய்த 271 பேரின் மர்மம் நீடிக்கிறது!

கடந்த ஜூன் மாதம் முதல் ஏற்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளின்போது வடபகுதியில் மாத்திரம் கைதுசெய்யப்பட்ட 271 பேரின்நிலை தொடர்ந்தும் மர்மமாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இவர்களது நிலைபற்றித் தெரிந்துகொள்ள இராணுவத்துடன் தொடர்புகொண்டபோது எதுவித ஆக்கபூர்வமான பதிலும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் அனேகமானோர் வலி வடக்குப் பகுதிகளையும், தீவுப்பகுதியையும் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ப — 11)

## வலது காலை இழந்து வலம் வரும் குடும்பம்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே விபத்தில் அடிபடுவது. அதை ஒட்டிச் சிகிச்சை பெறுவது இவை எல்லாம் அடிக்கடி நடப்பவைதான்.

ஆனால் தெற்கு இங்கிலாந்தைச் சேர்ந்த சஸ்ஸெக்ஸ் பகுதியில் வசிக்கும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவர்- கணவன், மனைவி, பிள்ளை ஆகியோர் வெவ்வேறு விபத்தில் ஒரே வாரத்தில் மாட்டிக்கொண்டார்கள். என்ன அதிசயம்? மூன்று பேர்களுக்குமே விபத்து வலக்காலில் ஏற்பட்டு கால் துண்டிக்கப்பட்ட நிலையில் ஊன்றுகோலுடன் உலாவருகின்றார்கள் அவர்கள்.

## பல்கலை ஊழியருக்கு ஊக்குவிப்புப்படி

யாழ் பலகலைக்கழக கல்விசார், மற்றும் நிர்வாகத் துறை ஊழியர்களுக்கு 1989 ஜூன் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குரிய ஆபத்துக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

இதன்படி ஊழியர் ஒருவரின் அடிப்படைச் சம்பளத்தில் அரைவாசி அல்லது ஐந்நூறு ரூபா இதில் எது அதிகமோ அது ஆறுமாத காலத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும். (34)

## பால பண்டித வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஆசிரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடாத்தும் பண்டிதர், பால பண்டிதர்வகுப்புக்கள் ஜனவரி 20-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை யாழ் நாவலர் வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. (உ/த) பரீட்சையில் தமிழ்மொழியில் திறமைச்சித்தி பெற்றவர்களும், பிரவேச பண்டிதப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களும், பாலபண்டிதர் வகுப்பிற் படிக்கத் தகுதி உடையவர்கள்.

பாலபண்டிதர் பரீட்சை சித்தி பெற்றவர்களும், பல்கலைக்கழகத்தில் தமிழைத் தபது கலைத் தகுதி காண் பரீட்சைக்குத் தெரிந்து கற்றுச் சித்தி பெற்றவர்களும் பண்டிதர் வகுப்பிற் படிக்கத் தகுதி உடையவர்கள்.

இவ் வகுப்புக்களிலே சேர்ந்து கற்க விரும்புவோர் உரிய சான்றிதழ்களுடன் ஜனவரி 20 ஞாயிற்றுக் கிழமை காலை 9 00 மணிக்கு நாவலர் மகா வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுளது.

## ஆசிரிய கலாசாலை நேர்முகப் பரீட்சை 25-ம் திகதி வவுனியாவில் நடைபெறும்

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை ஆசிரிய கலாசாலைகளுக்கு தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மீண்டும் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 25 ஆம் திகதி வவுனியா கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

முன்னர் ஆசிரிய கலாசாலைத் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்பட்டமையும், வடபகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் சூழ்நிலை காரணமாக அங்கு செல்ல முடியாமல் போனமையும் வாசகர் அறிந்ததே.

## அம்புலன்ஸ் படகுச்சேவை கடற்படை அனுமதி மறுப்பு

தீவுப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளை முன்னிட்டு ஆரம்பிக்கப்படவிருந்த அம்புலன்ஸ் படகுச் சேவைக்கு கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்

செஞ்சிலுவைச் சங்க மேற்பார்வையில் அராலித்துறையில் ஒரு படகும், குறிகாட்டுவான் துறையில் ஒரு படகும் சேவைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அனுமதி மறுக்கப்பட்டதால் தீவுப்பகுதியில் இருந்து அவசிய நோயாளிகளை யாழ்ப்பாணம் கொண்டுவர முடியாத நிலைமை ஏற்படுவதுடன் அநாவசிய உயிரிழப்புக்கள் ஏற்படும் எனவும் தீவுப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (74. 19)

## "பல்கலைக்கழக ஊழியர் தினம்"

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து பிரதி வருடமும் "பல்கலைக்கழக ஊழியர் தினத்தை" கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தினத்தைப் பல்கலைக்கழக ஊழியர்களும், நிர்வாகமும் இணைந்து கொண்டாடுவது எனவும் முதலாவது தினத்தை எதிர்வரும் பெப்ரவரி 09 ஆம் திகதி அனுட்டிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆங்கில மருந்துக்கு ஒப்பான ஆயுர்வேத மருந்துகள் விற்பனை

தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள மருந்துத்தட்டுப் பாட்டைப்போக்க ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகள் நேற்று முதல் விற்பனைக்கு வந்துள்ளன.

மேற்கத்தைய நாட்டு மருந்துகளுக்கு ஒப்பானதாக இவை தயாரிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த முறை வெற்றியளித்துள்ளதால் எதிர்காலத்தில் வெளிநாட்டு மருந்துகளை நாம் எதிர்பார்க்கத்தேவையில்லை என ஆயுர்வேத வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## சுகாதாரச் சீர்கேடு

கிளிநொச்சி மாவட்டத்தில் நகர் சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையில் இல்லாததால் அங்கு சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது.

இங்கு பரிசோதிக்கப்படாத இறைச்சி வகைகளும் கால தாமதமான பைக்கட்டில் அடைக்கப்பட்ட பால்மாப் பொருட்களும், சமையற் பொருட்களும் பழுதடைந்த தின்பண்டங்களும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பாவனையாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

கட்டாக்காலி நாய்கள் அதிகரித்து நோய்களுடன் நகரில் பெருமளவில் நடமாடுகின்றன.

தேநீர்க்கடைகளில் மிகவும் பழுதடைந்த உணவு வகைகளும் சுத்தமற்ற நீரில் தயாரிக்கப்படும் பதார்த்தங்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (35)

## பொங்கல் கொண்டாட வந்தவருக்கு இராணுவம் கொடுத்த பட்டாசு'

தைப்பொங்கலுக்காகக் கொழும்பிலிருந்து பட்டாசு கொண்டுவந்த பயணியைச் சோதனையிட்ட இராணுவத்தினர் அப்பயணியைத் தனியே கூட்டிச்சென்று அப் பட்டாசு முழுவதையும் கொழுத்தி அப் பயணியின் காலுக்குக் கீழே போட்டு வெடிக்கவைத்தனராம்.

இதன்பின் அப்பயணியை இராணுவத்தினர் தாக்கிய பின்னரே போக அனுமதித்தனராம்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியாத் தடை முகாமில் இடம்பெற்றது.

இராணுவத்தினரின் இந் நடவடிக்கையின் பின்னர் சிறு காயங்களுடன் அவர்வீடு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-32)

## திருவள்ளுவருக்கு ஒரு கோயில்

வள்ளுவர் பெருமான் பிறந்த நாளை ஒட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று அவருக்கு விழா எடுக்கப்படுகிறது.

இவ்வைபவத்தை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் பிறந்தவர், வாழ்ந்தவர் என்று சொல்கிறார்கள்.

சங்க காலத்தில் திருக்குறள், திருவள்ளுவர் போன்ற சொற்கள் வழக்கில் இல்லை. அந்நாளில் திருக்குறளை அறநூல் என்றும், திருவள்ளுவரைத் தெய்வப் புலவர் என்றும், தேவர் என்றும் வழங்கி வந்துள்ளனர். 'திருக்குறள்' கூறுகிறது என்ற கருத்தில் 'அறம் பாடிற்று' என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

மயிலாப்பூரில் திருவள்ளுவருக்கென்று ஒரு தனிக்கோயிலே இருக்கிறது இந்தக் கோயில் உள்ள தெருவுக்கே திருவள்ளுவர் கோயில் தெரு என்று தான் பெயர்.

தற்போது திருவள்ளுவர் கோயில் உள்ள இடத்தில்தான் வள்ளுவர் கோட்டம் அமைப்பது என்ற யோசனை ஆரம்பத்தில் தமிழக அரசுக்கு இருந்தது. பின்பு இடவசதியை முன்னிட்டு அந்த யோசனை கைவிடப்பட்டுச் சென்னை நுங்கம்பாக்கத்தில் இப்போதுள்ள திருவள்ளுவரின் நினைவு மண்டபமாகிய வள்ளுவர் கோட்டம் கட்டப்பட்டது.

நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் அமைப்பது முடிவானதும், மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோயிலுக்கு அரசுப் பொருளுதவியுடன் திருப்பணி நடைபெற்றது. இந்தத் திருப்பணிச் சமயத்தில் பழைய இடத்தில் இங்கிருந்த பழைய கோயில் விக்கிரகங்களுடன் திருவள்ளுவருக்குப் புதிய ஒரு கோயில் எழுந்து விட்டது.

கோயில் நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் கோயிலுக்குள் உள்ள கோபுரங்கள் ஹிந்துக் கோயில்களிலுள்ள கோபுரங்களைப் போலவே அமைந்திருப்பதைக் காணலாம். பழைய கோயிலில் கருவறையில் மூலவரான திருவள்ளுவரின் விக்கிரகம் பள்ளத்தில் இருப்பது போல வீதியிலிருந்து அவ்வளவு தாழ்வாக இருந்தது இப்போதைய கோவிலில் பீடம் உயர்த்தப்பட்டு, பொதுவாக நாம் கோவில்களில் காண்பது போல் காணப்படுகிறது.

இங்குள்ள முக்கிய சந்நிதி திருவள்ளுவர் சந்நிதிதான். இங்கே மூலவரான திருவள்ளுவரின் சிலாமூர்த்தி பெரியதாகவும் அழகாகவும் உள்ளது.

மூலவரைத் தவிரத் திருவள்ளுவருக்கு இங்கே பஞ்சலோகத்தாலான உற்சவ விக்கிரமும் உண்டு. இந்த உற்சவரான திருவள்ளுவர், மயிலாப்[illegible] கோயிலில் பங்குனி மாதத்தில் நடைபெறும் அறுபத்து மூவர் உற்சவத்தில் கலந்து கொள்வார்.

திருவள்ளுவர் சந்நிதிக்கு எதிரில் உள்ள மண்டபத்தில் குறட்பாக்கள் சில எழுதப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் சந்நிதிக்கு இடப்பக்கத்தில் அம்மன் சந்நிதியைப் போன்று வாசுகிக்கும் ஒரு சந்நிதி இருக்கிறது. வாசுகி சந்நிதியை அடுத்துப் பித்தளைத் தகட்டால் மூடப்பட்டிருக்கும் ஓர் இலுப்பை மரத்தின் அடிப்பாகமுள்ளது. இது ஒரு சிறிய மண்டபத்திற்குள் இருக்கிறது

இந்த இலுப்பை மரத்தடியில்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் பிறந்ததாகக் கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

பித்தளைத் தகடு மூடிய இலுப்பை மரத்தடியின் எதிரில் கல்லாலான இரண்டு பாதங்கள் உள்ளன. இவை திருவள்ளுவரின் குருவான ஆனந்தநாத சுவாமிகளின் பாதங்கள் என்று இந்தக் கோயிலின் குருக்கள் கூறுகிறார்

திருவள்ளுவருக்கு ஒரு குரு உண்டு; அவரது பெயர் ஆனந்தநாத சுவாமி என்பது நாம் இதுவரையில் கேள்விப்படாத புதிய செய்தியாகும்.

பித்தளை மூடப் பெற்ற இலுப்பை மரத்தடிக்குப் பக்கத்தில் திருவள்ளுவர் சிலையைத் தவிர, அவரது பெற்றோரான ஆதிக்கும், பகவனுக்கும் சிலைகள் உள்ளன.

இந்த இலுப்பை மரத்தின் ஆயுளை ஆராய்ந்த ஜெர்மன் நாட்டு ஆராய்ச்சியாளர்கள், 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மரம் இது என்று கூறியுள்ளனர் இந்தத் தகவலைக் கோயிலைச் சேர்ந்த ஒருவர் கூறுகிறார்.

இலுப்பை மரத்தைப் பார்த்துவிட்டு அடுத்து ஏகாம்பரேச்வரரும காமாட்சியும் எழுந்தருளியுள்ள கோயிலுக்கு வரலாம்.

திருவள்ளுவர் கோயில் பிரகாரத்துள்ளேதான் ஏகாம்பரேச்வரர், காமாட்சி சந்நிதிகள் உள்ளன மொத்தமாக இவற்றைத் திருவள்ளுவர் கோயில் என்று வழங்கவும் செய்கிறார்கள்.

இங்கே ஏகாம்பரேச்வரர் சிவலிங்கமும், காமாட்சியின் சிலாமூர்த்தமும் உண்மையிலேயே அழகுடன் விளங்குகின்றன. அது மட்டுமன்றி இந்தச் சந்நிதிகளில் நல்ல தெய்வ சாந்நித்தியமும் திகழ்கிறது.

இங்குள்ள காமாட்சியையும், ஏகாம்பரேச்வரரையும் திருவள்ளுவரின் பெற்றோர்களான ஆதியும் பகவனும் வழிபட்டு அதன் பயனாகவே திருவள்ளுவர் பிறந்ததாகக் கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன கோயிலுக்குள் உள்ள கிணற்று நீரைத்தான் திருவள்ளுவர் சந்நிதி உட்பட இங்குள்ள அனைத்துச் சந்நிதிகளிலுமுள்ள தெய்வ மூர்த்தங்களின் அபிஷேகத்திற்கு நாள்தோறும் உபயோகிக்கிறார்கள்.

இந்தக் கிணறு வற்றாத ஒரு ஜீவநதியைப் போன்றது எப்போதுமே வற்றுவதில்லை. 1818 ஆம் ஆண்டு சென்னையில் கடும் நீர்ப்பஞ்சம் ஏற்பட்டதாம். அப்போது அன்றைய ஆங்கிலேய ஆட்சியில் எல்லிசன் பிரபு சென்னையில் பலவேறு இடங்களில் இருபத்தேழு கிணறுகளை அமைத்தாராம் அவ்

04 — ஆம் பக்கம் பார்க்க

Murasolie REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA 15-01-1991 செவ்வாய்க்கிழமை

# உலக அரங்கில்

## வளைகுடாப் போர் காலக்கெடு இன்று கடைசி நாள்!

வளைகுடா தொடர்பாக சமாதான முயற்சி ஏதும் தேவையானால் அதற்கு அமெரிக்காவே முயற்சிக்க வேண்டும். குவைத் ஈராக்கின் பத்தொன்பதாவது மாநிலம் இது தொடர்பாக எவரும் எம்முடன் மோதவர விரும்பினால் தாமும் தயார் என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனது வானொலி உரையில் 'சூடாக' உரையாற்றியுள்ளார்.

ஹுசைன் உடன் ஐ. நா. செயலர் பெரஸ்டி குயிலர் பேச்சு நடாத்தி விட்டு பாரிஸ் திரும்பிய இருபது நிமிடங்களில் இவ்வுரை ஈராக்கிய வானொலியில் ஒலிபரப்பப்பட்டது இதேசமயம் ஜனாதிபதி ஹுசையினின் போர்முரசுக்கு அந்நாட்டு நாடாளுமன்றமும் தனது முழு அளவு ஆதரவை நேற்று வெளியிட்டுள்ளது. இது ஈராக்கின் யுத்தப்பிரகடனமாக கருதப்படுகிறது இலங்கை நேரப்படி நாளை 16-ம் திகதி காலை 10. 30 மணியுடன் ஐ. நா. விதித்த காலக்கெடு முடிகிறது! பாரிஸ் சென்றுள்ள ஐ. நா செயலர் பெரஸ்டி குயிலர் அங்கு பிரேஞ் ஜனாதிபதி மித்திரோனுடன் பேச்சுகள் நடாத்தினார் பிரிட்டிஷ் பிரதமர் மேஜரும் மித்திரோனுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார் குயிலர் ஈராக்கில் தாம் நடத்திய பேச்சுகள் குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபையில் எடுத்துக் கூறவிருக்கிறார்.

ஈராக்கிற்கு எதிராக இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பித்தால் சிரியாவும் ஈராக்குடன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதலை நடத்தும் என சிரிய ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

இதனிடையே இஸ்ரேலிய விமானப்படை விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஈராக் தாக்கினாலும் இஸ்ரேல் திருப்பி தாக்கக்கூடாது என அமெரிக்கா விடுத்த கோரிக்கையை இஸ்ரேல் பிரதமர் ஷமீர் நிராகரித்து விட்டார். இஸ்ரேல் முதலில் தாக்குதலை ஆரம்பிக்கமாட்டாது. ஆனால் பதில் தாக்குதலை நடாத்தும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை யுத்த களமாக விளங்கவுள்ள சவுதிஅரேபிய - குவைத் - ஈராக்கிய எல்லைப்பகுதிகளில் இருதரப்பு ராணுவங்களும் தாக்குதலை ஆரம்பிக்கும் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சர்வதேசப்படைகளை பொறுத்தவரையில் அவர்கள் விமானப்படையையே நம்பியுள்ளனர். 17,000 போர் விமானங்களும் 12,000 குண்டுவீச்சுப்போர் விமானங்களும் அவர்கள் வசம் உள்ளன. ஈராக் விமானப்படை இத்தொகையின் அரைப்பகுதி விமானங்களையே கொண்டுள்ளது

தரைப்படையை பொறுத்தவரை ஈராக் பலம் வாய்ந்ததாக உள்ளது. 590,000 துருப்புகளும், 42, 000 டாங்கிகளும், மிகச்சிறப்பு வாய்ந்த 2000 ஏவுகணைகளும் (இரசாயன மற்றும் [illegible] கொண்டவை உட்பட) ஆகியவற்றை ஈராக் ராணுவம் கொண்டுள்ளது அநேகமாக சர்வதேச விமானப்படை ஈராக்கின் ராணுவ தளங்களை ஈராக்கிற்கு உள் சென்றுதாக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

யுத்தத்திற்கு தயாராகி வரும் ஈராக்கிய மக்களை நாட்டின் தேசியக் கொடியில் ''அல்லாஹோ அக்பர்'' என்ற இறைநாமத்தை பதித்து போருக்கு தயாராகும்படி ஜனாதிபதி ஹுசைன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

---

### திருவள்ளுவர்...

விதம் அமைக்கப்பட்ட இருபத்தேழு கிணறுகளில் திருவள்ளுவர் கோயிலில் உள்ள இந்தக் கிணறும் ஒன்றாகும். அக்கம் பக்கங்களிலுள்ள பல குடும்பத்தினர் திருவள்ளுவர் கோயில் கிணற்று நீரைத் தங்கள் சொந்த உபயோகத்திற்காக அன்றாடம் எடுத்துச் செல்கிறார்கள். ஏதோ அதிசயம் போன்று கோயிலில் இருந்த ஓர் அன்பர், ''சென்னையில் கடுந் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்ட காலங்களிலும் இந்தக் கோயில் கிணற்று நீர் வற்றியதில்லை; இது ஜீவநதி போன்ற கிணறு'' என்றார்.

திருவள்ளுவர் கோயிலுக்கு 1976 இல் அரசு உதவியுடன் திருப்பணி நடைபெற்றது 1984 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது இங்கே திருவள்ளுவர் பிறந்தநாளும், மறைந்த நாளும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. பிறந்தநாள் என்பது தைமாதத்தில் வரும் மாட்டுப் பொங்கல் நாளாகும். மறைந்த நாள் என்பது வைகாசி மாதத்தில் அனுஷ நட்சத்திரம் வரும் நாளாகும்.

திருவள்ளுவர், வாசுகி சந்நிதிகளிலுள்ள வழிபாட்டு முறைகள் சிவன் கோயில்களிலுள்ள விதிமுறைகளின் படி நடைபெறுகின்றன.

திருவள்ளுவர் சந்நிதியில் தமிழில் அர்ச்சனை செய்கிறார்கள். இந்த அர்ச்சனை திருக்குறள் கருத்துக்கள் சிலவற்றை நினைவுபடுத்தி, 'போற்றி' என்று முடிகிறது.

திருவள்ளுவர் கோயிலையொட்டி இந்தக் கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபம் ஒன்று இருக்கிறது. இந்தத் திருமண மண்டபத்திற்குத் 'திருவள்ளுவர் வாசுகி கல்யாண மண்டபம்' என்றே பெயரிட்டிருக்கிறார்கள். இந்த இடத்தைக் குறைந்த வாடகைக்குத் திருமணங்களுக்குத் தருகிறார்கள்.

திருவள்ளுவர் இங்குள்ள இலுப்பை மரத்தடியில்தான் பிறந்தார் என்ற கருத்தைப் பலரும் பலகாலமாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால், திருவள்ளுவர் கோயில் உள்ள இந்த இடத்தில் திருவள்ளுவர் மறைந்தபோது அவரது உடலைச் சமாதி வைத்தார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

தமிழ் நாட்டிலேயே திருவள்ளுவருக்கென்று அமைந்த கோயில் இது ஒன்றே. ஆனால் பின்னர் வள்ளுவர் குலத்தினர் தாங்கள் வாழும் திருவெற்றியூரில் திருவள்ளுவருக்குச் சிறிய ஒரு கோயில் கட்டியிருப்பதாகவும் அறியக்கிடக்கிறது.

— சுவாமி கமலாத்மானந்தர்

---

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 15-01-1991 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# நோயாளர் போக்குவரத்து சேவை யாழ் நகரில் ஆரம்பிக்கப்பட்டது

''நோயாளர் போக்குவரத்துச்சேவை'' நேற்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகமும், யாழ் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து இச் சேவையை ஆரம்பித்துள்ளது.

உள்ளூரில் வடிவமைக்கப் பட்ட வண்டில் மூலம் எரிபொருள் இன்றி இப் போக்குவரத்துச் சேவை நடைபெறும்.

யாழ் போதனா வைத்திய சாலையிலும், யாழ் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலுமிருந்துஇச்சேவை ஆரம்பக் கட்டமாக நடைபெறும். பின்னர் படிப்படியாக இச் சேவை விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடான இந்த நேரத்தில் இச் சேவை நோயாளருக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்குமென இச்செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (70)

---

## சிறுவனின் கைவிரல் துண்டிப்பு

இரு சிறுவர்கள் கோடரியைக் கொண்டு விளையாடிய போது சி. உதயகுமார் (3) என்ற சிறுவனின் கைவிரல் துண்டிக்கப்பட்டது.

இப்பரிதாபகரச் சம்பவம் நேற்று வேலணை அம்மன் கோயிலடியில் நிகழ்ந்துள்ளது (ப-11)

## சுண்டுக்குளியில் கடைஉடைத்து கொள்ளை

கடந்த வியாழக்கிழமை சுண்டுக்குளி பஸ்ரியாம் பிள்ளை சந்தியில் உள்ள எஸ். ஜெறோம் என்பவரின் பலசரக்குக் கடை உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

கடையின் முன் கதவை உடைத்து உள்புகுந்த கள்வர் ஆயிரம்ரூபா பெறுமதிவாய்ந்த அரிசி, மா, சீனி போன்ற பொருட்களைக் களவாடியுள்ளனர். (16)

---

### எதற்கும்...

இந்த முறையைப் பயன்படுத்தி லாலைநாரை மூலப் பொருளாகக் கொண்டும் காகிதத்தை உற்பத்திசெய்ய ஆலோசிக்கப்பட்டுள்ளதாக யாழ் காகித ஆலை உற்பத்திப் பொறுப்பாளர் க. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட கழிவு கடதாசியிலிருந்து காகிதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் காகிதங்கள் யாழ் நகரிலிருந்து வெளியாகும் தினசரிப்பத்திரிகையொன்றை அச்சிடப் பயன்படுத்தப்படவுள்ளது. (ப-11, 70)

---

### விடுதலைப்...

வினருக்கும் கடற்பிரதேசத்தில் எல்லைகள் வரையறுக்கப்பட்டதன் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது.

இதே வேளை சிறகு வலை, மடிவலை மூலம் மீன் பிடிக்கும் பிரச்சினையையும்தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. (66)

---

### வேலூர்...

காக தடுப்புச் சுவர்களை இடித்துத் தள்ள முயற்சித்ததாக சென்னையில் பொலிஸார் தெரிவித்தனர். தற்போது கூடுதல் பொலிஸார் அனுப்பப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

---

### தமிழகம்...

துள்ளார்,

நேற்று சென்னையில் நிருபர்களிடம் பேசிய அவர், வேறு மாநிலங்களை விட தமிழ்நாடே சட்டம் ஒழுங்கில் சிறப்பாக உள்ளது என்றார்.

---

## பல்கலைக்கழகத்தின் பணத்தை வங்கி தர மறுக்கிறதாம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பணத்தை இங்குள்ள வங்கி ஒன்று தரமறுத்துள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இங்குள்ள வங்கிகளுக்கு கொழும்பில் இருந்து அனுப்பப்படும் பணத்தில் பல்கலைக்கழகத்துக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை சேர்த்து அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வங்கியின் மறுப்பையடுத்து பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய மகாபொல கொடுப்பனவுகளைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. கடந்த காலங்களில் யாழ் நகரில் வங்கிகள் இயங்க முடியாத நிலையில்இருந்தபோது பல்கலைக்கழக கட்டிடத்தைக் கொடுத்து உதவியதும் குறிப்பிடத் தக்கது. (70)

## கிளிநொச்சி குண்டு வீச்சு விபரம் ஜெனிவாவுக்கு அனுப்பப்படும்

ஸ்ரீலங்கா விமானப்படை பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடாத்துவதால் உயிரிழப்புக்கள் அதிகரித்து வருவது பற்றிய முழு விபரமும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க தலைமைச் செயற்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங் தெரிவித்தன.

கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விமானத்தாக்குதலால் பாதிக்கப்பட்ட இடங்களையும், சேதங்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வைத்திய பிரிவு பிரதிநிதி ஜெற்றி பார்வையிட்டார். (74)

## கேரதீவுப் பாதையில் இரவு நேரம் வழிப்பறிக் கொள்ளை

கேரதீவுக்குச் செல்லும் பாதையில் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 30 மணியளவில் மண்ணெண்ணெய் வியாபாரி ஒருவரைப் பின் தொடர்ந்து வந்த மூவர் ஐயனார் கோவிலுக்கு அருகில் வைத்து அவரிடமிருந்த பணம், சைக்கிள், எண்ணெய் பெரல், என்பவற்றை அபகரித்ததுடன், அவரின் சாரத்தைக் கிழித்து கை கால்களைக் கட்டி பற்றைக்குள் போட்டு விட்டுச் சென்றுவிட்டனர்.

மூன்று நாட்களால் அப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர்கள் இவரைக் கண்டு மீட்டு வந்துள்ளனர். (74 66)

## வடக்கு கிழக்குப் பிரச்சினையால் மலையகத் தமிழரும் பாதிப்பு

''வடக்கு. கிழக்குப்பிரச்சினை காரணமாக அப்பகுதி தமிழ் மக்கள் மாத்திரமன்றி ஏனைய பகுதித் தமிழர்களும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக மலைநாட்டுத் தமிழர்களும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.''

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் ஹட்டனில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர், வடக்கு. கிழக்கு மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் மலையக மக்களுக்கு பெரும் பங்குண்டு

இவ் விடயத்தில் அரசு பேச்சுவார்த்தைமூலம் ஒரு சுமுகமான நிரந்தரத்தீர்வைஎடுக்க வேண்டும் என்றார். (74)

---

### சிங்களப்...

டபிள் எச் டபிள்யு. நாமரட்ன (PC 5434) என்பவரே நேற்று விடுதலை செய்யப்பட்டவராவார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் இரத்தினபுரியைச் சேர்ந்தவர் நோய் வாய்ப் பட்டதனால் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோய் வாய்ப்பட்டதினால் மரணமான குருநாகல் கெப்பிட்டிப்பொலவைச் சேர்ந்த 50 வயதான பொலிஸ் சார்ஜன்ட் கருணரத்தின (PC 11812) என்பவரின் சடலமே நேற்று விடுதலைப்புலிகளினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

---

### வடக்கு-கிழக்கு...

குழுவினரின் இலங்கை விஜயம் பயனுள்ளதாகவும் மேலும் பல சலுகைகளை அங்கு பெற்றுக்கொள்ள உதவியாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (66)

---

கையளிக்கப்பட்ட சடலத்துடன் விடுதலையான பொலிஸ்காரரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்தில் பருத்தித்துறை துறைமுகம் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கடற்படையால் காங்கேசன்துறைக்கும் பின்னர் பலாலிக்கும் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது. (74, ப11)